# ‘கரோனா, கருப்பு பூஞ்சை நோய் குறித்த ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்’




காப்புரிமைச் சான்றிதழை டாக்டர் முகமது ரேலாவிடம் வழங்குகிறார் கண்டுபிடிப்பாளர் டாக்டர் கே.பிரபு. உடன் கல்லூரி முதல்வர் ஜான்சன், இயக்குநர் டி.ஆர்.குணசேகரன், பதிவாளர் எஸ்.பூமிநாதன், ஆராய்ச்சித் துறை இயக்குநர் பி.ராமசாமி.

**தாம்பரம், ஜூன் 4:** கரோனா, கருப்புப் பூஞ்சை குறித்த மருத்துவ ஆராய்ச்சி நடவடிக்கைகளில் மாணவர்கள் ஈடுபட வேண்டும் என்று பாரத் உயர் கல்வி ஆராய்ச்சி நிறுவனத்தின் வேந்தரும், ரேலா மருத்துவமனைத் தலைவருமான பேராசிரியர் டாக்டர் முகமது ரேலா வலியுறுத்தினார்.

பாரத் கல்வி நிறுவனத்தின் அங்கமான ஸ்ரீ பாலாஜி மருத்துவக் கல்லூரி, புற்றுநோய், எலும்பு நோய்க்கு மருந்துக் கலவை, புதிய மருத்துவ சிகிச்சைமுறை உள்ளிட்ட 6 புதிய மருத்துவக் கண்டுபிடிப்புகளுக்கு மத்திய அரசின் அறிவுசார் சொத்துரிமை அமைப்பு மூலம் 6 காப்புரிமைகளை அண்மையில் பெற்றுள்ளது. சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சியில் முகமது ரேலா பேசியது:

நோய்க்கு மருந்து கண்டறியும் முயற்சியில் சில மாணவர்கள் ஈடுபட்டு காப்புரிமைகள் பெற்று இருப்பது பாராட்டத்தக்கது.

தற்போது உலகை அச்சுறுத்தி வரும் கரோனா, உருமாறிய கரோனா, கருப்புப் பூஞ்சை குறித்த ஆராய்ச்சி நடவடிக்கைகளிலும் அவசியம் ஈடுபட முன்வரவேண்டும். ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்கத் தயாராக உள்ளோம் என்றார் அவர்.